# 04 தகவல் சேகரிப்போம்

## அறிமுகம்

அன்றாடம் எமக்குக் கிடைக்கும் தகவல்களும் கருப்பொருளும் மிக முக்கியம் வாய்ந்தவையாகும். பல்வேறுபட்ட வழிகளில் எமக்குத் தகவல்கள் கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டு எமது கல்வி நடவடிக்கைகளையும். ஏனைய சகல செயற்பாடுகளையும் திறம்பட செய்யக் கூடியதாக இருக்கும். இவ்வலகைக் கற்பதன் மூலம் தகவல்களைப் பெறத்தக்க வழிகளை அறிந்து கொள்வீர்கள். இவ்வாறு அறிந்துகொண்ட தகவல்களைப் புத்தி சாதுரியத்துடனும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தும் தேர்ச்சிகளையும் பெறுவீர்கள்.

## 4.1 தகவல்களை அறியும் வழிமுறைகள்

தகவல்களுக்கு அடிப்படையாக அமைவது தரவுகளாகும். தரவுகள் என்பது அறியப்பட்ட விடயங்களாகும். இவற்றை பெரும்பாலும் எண்களால் குறிப்பிடலாம். உதாரணமாக உயரம், நிறை, தூரம், வயது போன்றனவாகும்.

தகவல்கள் என்பது தரவுகளை ஒழுங்கமைப்பதன் மூலம் பெறப்படும் செய்தியாகும். உதாரணமாக கிண்ணியா மகாவித்தியாலயத்தில் தரம் 7 இல் 15 பெண் பிள்ளைகளும் 20 ஆண்பிள்ளைகளும் கல்வி கற்கிறார்கள்.




கிண்ணியா மகா வித்தியாலயத்தின் 10 ஆம் ஆண்டு மாணவர்கள் பாடசாலையின் காலைகூட்டத்தில் உரையாடல் ஒன்றினை மேற்கொண்டனர். அவர்களின் உரையாடலில் இலவசக் கல்வியின் தந்தையான C.W.W கன்னங்கரவைப் பற்றி மாணவ மாணவிகள் அறிந்திராத பல விடயங்கள் தெரியவந்தன.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

கன்னங்கரவின் குழந்தைப் பருவம் கழிந்த விதம், பாடசாலைக் காலத்தில் அவர் வெளிப்படுத்திய ஆற்றல்கள், கன்னங்கரவின் அரசியல் வாழ்க்கை முறை மற்றும் அவரின் சமூக சேவை போன்ற பல்வேறு அம்சங்கள் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. கன்னங்கர ஆற்றிய சேவை பற்றிய கலந்துரையாடலை கேட்டுக் கொண்டிருந்த இப்பாடசாலையின் ஏழாம் தரத்தில் கல்வி பயிலும் சர்மில் என்ற மாணவனுக்கு தன்னைப்பற்றிய சிறுவயது சம்பவங்களை அறிந்து கொள்வதற்கான ஆர்வம் ஏற்பட்டது. கீழே தரப்பட்டிருப்பது அவர் பற்றிய விடயங்களாகும்.



சர்மில் கிண்ணியா மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 12 வயதுச் சிறுவன். அவன் 1996-11-06 ஆம் திகதி பிறந்துள்ளான். அச்சிறுவனின் தந்தை பிறந்த வைத்தியசாலையான கிண்ணியா போதனா வைத்தியசாலையிலேயே சர்மிலனும் பிறந்தான்.

விவசாயம் செய்து வாழ்க்கையைக் கொண்டு செல்லும் ஆறுமுகம் குணாளன் சர்மிலனின் தந்தையாவார். கணபதிப்பிள்ளை திருமகள் என்பது சர்மிலனின் தாயினுடைய பெயராகும். இவரும் கிண்ணியா போதனா வைத்திய சாலையிலேயே பிறந்தார். சர்மிலனின் தந்தை1965.09.27 ஆம் திகதி பிறந்துள்ள அதே சமயம் 1968- 10-16 எனும் திகதியில் சர்மிலனின் தாய் பிறந்துள்ளார். அவர்கள் இருவருமே தமிழினத்தைச் சேர்ந்த இந்துக்களாவர்.

சர்மிலன் தனது குடும்பத்தின் இவ்வாறான சகல விபரங்களையும் அவனது பாட்டனாரான சின்னையா ஆறுமுகம் என்பவரிடமிருந்தே அறிந்து கொண்டான். அவர் 1926-05-20 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தார்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

(01) சர்மிலன் பற்றி மேற்கூறப்பட்ட விபரங்களின் மூலம் கீழே உள்ள மாதிரி பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தை அப்பியாசப் புத்தகத்தில் பிரதி செய்து பூரணப்படுத்துங்கள்.

(02) நீங்கள் மேலே அறிந்துகொண்ட சர்மிலனின் வாழ்க்கை விபரங்களைக் கருத்திற் கொண்டு உங்களின் பிறப்பத்தாட்சி பத்திரத்தை தயாரிக்கவும்.

**மாதிரி பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்**

| | | |
|---|---|---|
| பிறந்த திகதியும் இடமும் | | |
| பெயர் | | |
| பால் | | |
| தகப்பன் | முழுப்பெயர் | |
| | பிறந்த திகதி | |
| | பிறந்த இடம் | |
| | இனம் | |
| | தொழில் | |
| தாய் | முழுப்பெயர் | |
| | பிறந்த திகதி | |
| | பிறந்த இடம் | |
| | இனம் | |
| | வயது | |
| பாட்டன் | முழுப்பெயர் | |
| | பிறந்த திகதி | |
| | பிறந்த இடம் | |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

ஒருவரைப்பற்றிய விபரங்களை அறியக் கூடிய மேலும் சில வழிமுறைகள்

- குழந்தையின் சுகாதார வளர்ச்சிப் பதிவேடு

  (குழந்தை ஒன்றின் பிறப்பிலிருந்து அதன் வளர்ச்சி, உயரம், நிறை ஆகிய விபரங்களுடன் விசேடமாக குறிப்பிடவேண்டிய நோய்கள் பற்றியும் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும்.)
- தபால் அடையாள அட்டை
- தேசிய அடையாள அட்டை
- கடவுச் சீட்டு
- வாகன அனுமதிப் பத்திரம் (வாகன ஓட்டுநர்களுக்கு உரியது)
- கிராம உத்தியோகத்திரின் அத்தாட்சிப் பத்திரம்

எம்மைப்பற்றி அறிந்தது போல எம்மைச் சூழ இருப்பவர்கள் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டிய விடயங்கள் குறித்து சற்று அவதானிப்போம்.

1. உங்கள் நண்பரின் முழுப் பெயர் மற்றும் முகவரியுடன் அவர் பற்றிய முக்கிய விடயங்கள் உங்களுக்குத் தெரியுமா?
2. உங்கள் பெற்றோரின் முழுப் பெயர், அவர்களின் வயது உங்களுக்குத் தெரியுமா?
3. உங்களுக்கு சகோதர சகோதரிகள் இருந்தால் அவர்களின் பிறந்த தினம் உங்களுக்குத் தெரியுமா?
4. உங்கள் ஆசிரியர்களின் முழுப்பெயர், முகவரி உங்களுக்குத் தெரியுமா?
5. நண்பர்களுடன் அவசரமாக தொடர்பு கொள்ள வேண்டிய சூழ்நிலையேற்பட்டால் அவர்களின் வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை ஞாபகத்தில் வைத்திருக்கவோ அல்லது எழுதிவைத்துக் கொள்ளவோ முயற்சிப்பீர்களா?
6. உங்களின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களை அவசரமாக பெற்றுக்கொள்ள வேண்டியேற்பட்டால் அவற்றை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா?

மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நீங்கள் ஆம் என்ற பதிலை தருபவர்களாக இருந்தால் ஏதோ ஒரு வகையில் தகவல்களை ஆராய

முயற்சிப்பவர்கள் எனக் கருதலாம். வீட்டிற்கு அடுத்ததாக நாம் அதிக அளவு நேரத்தைக் கழிப்பதுப்பாடசாலையிலேயே ஆகும். ஆகவே பாடசாலையைப் பற்றிய விபரங்களை அதிகளவில் அறிந்து வைத்திருப்பீர்கள்.

கீழே வரும் கேள்விகளுக்கு பதிலளிப்பதன் மூலம் உங்களுடைய ஆற்றலை அனுமானித்துக்கொள்ள முடியும்.

1. பாடசாலைப் பெயர் :
2. பாடசாலை முகவரி :
3. பாடசாலைக் கொடியின் நிறம் :
4. பாடசாலைத் தொலைபேசி இலக்கம் (இருக்குமானால்) :
5. பாடசாலை அமைந்துள்ள கிராமசேவகர் பிரிவு :
6 பாடசாலை அமைந்துள்ள மாகாணம் / மாவட்டம் / பிரதேசம்
7. பாடசாலை அமைந்திருக்கும் கல்வி வலயம் :
8. உங்கள் பாடசாலையில் எத்தனையாம் வகுப்பிலிருந்து எத்தனையாம் வகுப்புவரை கல்வி கற்பிக்கப்படுகின்றது :
9. பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு :
10. ஆரம்பத்தில் இருந்த ஆசிரிய, மாணவர்களின் எண்ணிக்கை :
11. பாடசாலையின் தற்போதைய ஆசிரிய, மாணவர்களின் எண்ணிக்கை:
12. பாடசாலையின் தற்போதைய அதிபரின் பெயர் :
13. பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் தலைவர், செயலாளர் ஆகியோரின் பெயர் :



தற்போது நீங்கள் உங்களைப்பற்றியும் உங்களுடைய பெற்றோரைப் பற்றியும் உங்கள் பாடசாலை குறித்தும் போதிய தகவலைப் பெற்றுள்ளீர்கள். ஆயினும் எம்மைச் சூழவுள்ள சமூகத்தை உள்ளடக்கிய உலகத்தைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டியது மிக முக்கியம். வேகமாக மாறிவரும் உலகம் பற்றிய புதிய தகவல்கள் எம்மை வந்து சேர்வதற்கு பல்வேறு வழிகள் உள்ளன. அவற்றை அன்றாடம் தெரிந்து கொள்வதன் மூலம் நாம் உலகம் பற்றிய பொது அறிவை கடினமின்றி அறிந்து கொள்ள முடியும்.

வகுப்பறைக்கு வெளியே தகவல்களை அறிந்து கொள்ளக்கூடிய வழி முறைகள் எவை எனச் சிந்தியுங்கள். புதிய தகவல்களை அறிந்து கொள்வதில் பிரதான இடத்தைப் பிடிப்பது கணினி என அடையாளம் காணப்பட்டுள்ளது. இது பற்றி உங்கள் ஆசிரியரிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள்.










கணினியூடாக இணையத்தளத்தில் உலாவருவதன் மூலம் எமக்கு வேண்டிய தகவல்களை வரையறையின்றிப் பெற்றுக் கொள்ள முடியும்.

## புதிய தகவல்கள் உங்களைத் தேடி வரக் கூடிய வழிமுறைகள்



தகவல்கள் அறிந்து கொள்வதற்கு உதவும் காரணிகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் எவ்வாறான விடயங்களை எப்படிப் பெற்றுக் கொள்வது என பார்ப்போம்.

**தொலைக்காட்சி :-**

1. உள்நாட்டு வெளிநாட்டு செய்திகள் - தகவல்கள்.
2. பொழுதுபோக்கு அம்சங்கள், பொதுவான சம்பவங்கள் போன்றவற்றை படங்களாகவும் காட்சிகளாகவும் தெரிந்துகொள்ள முடியும்.

**தொலை நகல் :-**

எழுத்து அல்லது படங்களை அதே வடிவத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலே குறிப்பிடப்பட்ட வழிகளின் மூலம் நாம் தகவல்கள் பெற்றுக் கொள்ளலாம்.

## தகவல்களின் உண்மைத்தன்மை

*"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்*
*அப்பொருள் மெய் பொருள் காண்பது அறிவு" குறள் 43:423*

ஊடகங்களுக்கிடையிலான போட்டியின் காரணமாக துரித கதியில் வெளியிடப்படும் தகவல்கள் சில சந்தர்ப்பங்களில் தவறானவையாகவும் இருக்கலாம். வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை போன்ற எல்லாவற்றிலும் நாம் எமது கவனத்தை வைத்திருப்பதன் மூலம் எது சரியான தகவல் என நம்மால் அனுமானித்துக் கொள்ள முடியும்.

பத்திரிகைகள், தொலைக்காட்சிகளில் பரபரப்பான செய்திகளும் வருவதுண்டு. நாம் பல்வேறு விதமான தகவல்களைப் பெறினும் அவற்றின் மெய்த் தன்மையை கண்டறிதல் வேண்டும். தவறான அல்லது திரிக்கப்பட்ட செய்திகளும் எமக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு. தகவல்களை வெளியிடும் நிறுவனங்களும் தனி நபர்களும் தமது மன விருப்பத்திற்கு ஏற்ப தகவல்களை திரித்துக் கூறுவதுண்டு. நாம் நிதானமாக ஆராய்ந்து உண்மைகளைக் கண்டறிய வேண்டும். மெய்யான தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

### செயற்பாடு

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

I
1. ஒருவரின் பிறந்த தினத்தை மிகச் சரியாக தெரிந்துகொள்ள தேவையான மூல ஆவணம் எது?
2. அந்த ஆவணத்தின் மூலம் ஒரு நபரைப் பற்றி மேலதிகமாக அறிந்து கொள்ளக் கூடிய விடயங்கள் சிலவற்றை குறிப்பிடுக.
3. தகவல்கள் உங்களைத் தேடி வரும் வழிமுறைகள் 3 குறிப்பிடுக.
4. ஒரே தகவலாக இருந்தாலும் பல்வேறு வழிகளில் தெரிந்து கொள்வதால் ஏற்படும் நன்மைகள் எவை?
5. முக்கிய (ஆவணங்களை) தகவலொன்றை அதேபோன்ற வடிவத்தில் வேறொரு இடத்துக்கு அனுப்ப வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?
6. இணையத்தளத்தில் உலாவருவது பற்றி நீங்கள் அறிந்து கொண்டவை எவை?


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

**II** 1. நூலக வாரத்தை கொண்டாடுவதற்கு குழுக்களாக பிரிந்து பின்வரும் தலைப்புக்களில் புத்தகங்களை ஆக்குக.

   **i)** உலகின் முக்கிய [சிரேஷ்ட] தலைவர்கள்

   **ii)** சுற்றுச் சூழலில் இயற்கையின் முக்கியத்துவம்

2. நீங்கள் வாசிக்கும் பத்திரிகைகளை சேகரித்து அவற்றை பின்வரும் தலைப்புக்களில் காட்சிப்படுத்துக.
   சிறுவர், இளைஞர், மங்கையர் விளையாட்டு, விஞ்ஞானம், தினசரி, வாராந்தம்.

3. இலங்கையில் உங்களுக்குத் தெரிந்த வானொலி சேவை மற்றும் தொலைக்காட்சி சேவைகளை வகைப்படுத்தி அவற்றில் ஒளி, ஒலி பரப்பப்படும் சிறுவர் தொடர்பான விடயங்களை அட்டவணைப்படுத்துக.

## 4.2 ஆக்கச் சிந்தனையுடன் கருமமாற்றுவோம்

அன்றாட வாழ்கையில் பல்வேறுபட்ட வழிகளில் விசேட அம்சங்கள் பலவற்றைத் தெரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். அவ்வாறு தெரிந்த விடயங்களை நாம் முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு அவற்றின் மேல் நமது முழுமையான கவனத்தைச் செலுத்த வேண்டும். அவ்வாறு செயற்படுவோமானால் நாம் அறிந்தவற்றில் புதியதொரு பரிணாமத்தைப் பெறமுடியும்.

சகல காரியங்களின் போதும் நாம் புதிய கோணத்தில் சிந்திக்க முயற்சிப்பது ஆக்க முயற்சிக்கான அடையாளமாக அல்லது முழுமைத்தன்மையை எடுத்துக்காட்டும் சிறந்த குணாம்சமாக அமையும்.

நீங்கள் ஒரு படத்தை வரையும் போதோ அல்லது வேறெந்த செயலைச் செய்யும் போதோ ஏற்கனவே இருந்த முறையைக் காட்டிலும் புதிய முறையில் அம்முயற்சியை செய்வீர்களாயின் அது ஒரு புத்தாக்க முயற்சியாக அமையும். எந்தவொரு சந்தேகத்திற்கிடமான விடயத்திலும் இவ்வாறு சிந்திக்கவோ அல்லது செயற்படவோ முயற்சிப்பீர்களானால் உங்களுக்கு பல நன்மைகளை தருவதாய் அமையும். உங்களுக்குக் கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உங்களது சுய ஆக்கத்தை வெளிப்படுத்த முயற்சி செய்யுங்கள்.இவ்வாறு செயற்பட்டவர்களே இன்று நாம் அறியும் கண்டுப்பிடிப்பாளர்களாகவும் சாதனையாளர்களாகவும் இருந்துள்ளனர்.

**பின்வரும் ஓர் சம்பவம் இதனைத் தெளிவாகக் காட்டுகிறது.**

மின் குமிழை கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசன் தனது முதல் முயற்சியிலேயே வெற்றியை அடையவில்லை. ஏறக்குறைய ஆயிரம் பரிசோதனைகளுக்குப் பிறகே அவர் மின் குமிழைக் கண்டுப்பிடித்தார். "நீங்கள் ஆயிரம் பரிசோதனைகள் செய்தீர்கள் அதில் 999 பரிசோதனைகள் தோல்வி அடைந்தன. ஒன்றே ஒன்றுதான் வெற்றி பெற்றது இல்லையா? என்று அவரிடம் ஒருவர் கேட்டார் அதற்கு எடிசன் சொன்னார் " முதல் 999 பரிசோதனைகளையும் நான் எதுவுமே கண்டுபிடிக்கவில்லையென்று யார் சொன்னது.? ஒரு மின் குமிழை உருவாக்க தவறாக முயற்சி செய்வது எப்படி என்று இந்த 999 பரிசோதனைகளில் இருந்து நான் கற்றுக்கொண்டேன் என்றார்.


தோமஸ் அல்வா எடிசனின் பதிலைப் பார்த்தீர்களா? 999 முறை பரிசோதனைகள் தோல்வி அடைந்த போதும் அதனை தோல்வியாக எண்ணாமல் ஆக்கபூர்வமான சிந்தனையுடன் கருமமாற்றி வெற்றி கண்டார்.


**செயற்பாடு**

**கீழே தரப்பட்ட சித்திரங்களை அவதானித்து அவை வெளிப்படுத்தும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு உங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களை ஒரு சம்பவமாக எழுதுக.**










## செயற்பாடு

ஒரு நாட்டில் பாதணிகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் முதலாளி இருந்தார். அவர் தனது தொழிற்சாலையில் உற்பத்தி செய்யும் பாதணிகள் விற்பனை செய்யக் கூடியதாக இருக்குமா என்று தெரிந்து கொள்ள ஒரு விற்பனை முகாமையாளரை அயல் நாட்டிற்கு அனுப்பினார். அவ் முகாமையாளர் அந்நாட்டிற்குச் சென்று பார்த்து விட்டு அந்த நாட்டில் எமது பாதணிகளை விற்க முடியாது என்று செய்தி அனுப்பினார்.

முதலாளி அந்நாட்டிற்கு இன்னொரு முகாமையாளரை அனுப்பினார். அங்கு சென்ற இரண்டாவது முகாமையாளர் அங்குள்ள நிலமைகளைப் பார்த்து விட்டு எமது பாதணிகள் நன்றாக விற்பனை செய்யக் கூடிய நிலமை உண்டு என்று செய்தி அனுப்பினார். இருவரையும் அழைத்த முதலாளி முதலாமவரிடம் ஏன் விற்பனை செய்ய முடியாது என்று கேட்டார். அதற்கு

**அந்த முகாமையாளர் அந் நாட்டில் யாருமே பாதணிகள் அணிவதில்லை என்றார். இரண்டாவது முகாமையாளரிடம் ஏன் விற்பனை செய்யக் கூடியதாக உள்ளது என்று கேட்டார். அதற்கு அவர் அங்கு யாருமே பாதணிகள் அணிவதில்லை என்ற பதிலையே சொன்னார்.**

**இந்த இரண்டு விற்பனை முகாமையாளர்களில் எவர் சிறந்தவர் என நீங்கள் நினைக்கிறீர்கள்? அதற்கான காரணத்தை குழுக்களாக கலந்துரையாடி வகுப்பில் முன் வைக்கவும்.**

**சாரம்சம்**

☞ *தகவல்களை பல்வேறு வழிகள் மூலம் அறிந்து கொள்ளலாம். அன்றாட தேவைகளுக்கு தகவல்கள் அவசியமானவை. தகவல்கள் சரியானவை தானா என்பது பற்றி உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். நாம் தெரிந்துகொண்ட விடயங்கள் மற்றும் தகவல்களை தேவையான வடிவங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.வாழ்க்கையில் சவால்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் ஆக்கபூர்வமான சிந்தனையுடன் கருமமாற்ற வேண்டும்.*